| | |
|---|---|
| விடுநர்:<br>திரு.அ.சண்முக சுந்தரம் இ.ஆ.ப.,<br>மாவட்ட ஆட்சிதலைவர்,<br>வேலூர் | பெறுநர்:<br>மேலாளர்,<br>முன்னோடி வங்கி<br>வேலூர் |

ந.க.கே6/4464/2020 நாள்: .11.2020

அய்யா,

பொருள்: ஆதிதிராவிடர் நலம் -வேலூர் மாவட்டம்- கல்வி உதவித் தொகை - 2020-2021 ஆம் ஆண்டிற்கு கல்வி உதவித்தொகை வழங்குதல் - மாணாக்கர்களுக்கு ஆரம்பகால வைப்பிட்டுத்தொகை இல்லாமல் -- ("0" Balance Account) வங்கிக் கணக்கு தொடங்குவது - தொடர்பாக.

பார்வை: 1.சென்னை, ஆதிதிராவிடர் நல ஆணையரக கடித ந.க.எண்.ஜே2/10604/2020 நாள்:20.06.2020
2.இவ்வலுவலக கடித எண்.ந.க.கே6/4464/2020, நாள்:06.11.2020

வேலூர் மாவட்டத்தில், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் மூலம் வழங்கப்படும் கல்வி உதவித்தொகை பெறும் அனைத்து மாணாக்கர்களுக்கும் வங்கிக்கணக்கு எண் துவங்க பார்வை 1-இல் காணும் சென்னை, ஆணையரக கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் பார்வை 2-இல் காணும் இவ்வலுவலக கடிதம் மூலம் வேலூர் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர், மாவட்ட கல்வி அலுவலர் மற்றும் வட்டார கல்வி அலுவலர்களுக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2020-2021 ஆம் நிதியாண்டு முதல் அனைத்து மாணாக்கர்களுக்கும் IFHRMS மூலம் அவர்களுடைய வங்கி கணக்கில் நேரடியாக கல்வி உதவித்தொகை வரவு வைக்கப்பட உள்ளது. எனவே, SC/ST/SCC மாணாக்கர்களுக்கு ஆரம்ப கால வைப்பீட்டுத்தொகை இல்லாமல் ("0" Balance Account) வங்கிக்கணக்கு தொடங்க அனைத்து வங்கி கிளை மேலாளர்களுக்கும் அறிவுரை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஒம்/-அ.சண்முகசுந்தரம்
மாவட்ட ஆட்சியர்,
வேலூர்-09.

/உத்தரவுப் படி/

23/11/20
மாவட்ட ஆட்சியருக்காக

நகல்
ஆணையர்,
ஆதிதிராவிடர் நல ஆணையரகம்,
சென்னை-05

23/11/20

Scanned with CamScanner